**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W. 11 /L.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கந்தகுமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.03.2026.**

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கைப் பதிவுச் செய்த காவல் அதிகாரி தற்சமயம் பணிமாறுதலில் **தாம்பரம்** காவல் ஆணையரகத்தில் எஸ்டேட் welfare பிரிவில் உதவி ஆணையராக பணிசெய்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் **திருவள்ளூர் மாவட்ட** நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u>** :

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்பொழுது தாம்பரம் காவல் ஆணையரகத்தில் எஸ்டேட் welfare பிரிவில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். 31.03.2010ம் தேதி குளச்ச்ல காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல்நிலைய குற்றஎண் 85/2010 வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகளை விசாரித்ததில் உதவி ஆய்வாளரிடம் கூறியது போல் கூறியதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யவில்லை.

2. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு மருத்துவ சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்து காயச்சான்று பெற்றேன். காயத்தின் தன்மை பொறுத்து அவர் கொடுங்காயம் என்று சான்று அளித்ததால்

காயத்தைப் பொறுத்து சட்டப்பிரிவு 325 இ.த.ச. 1860ன் கீழ் பிரிவுமாற்றம் செய்து 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவுகள் 147, 341, 325, 294(பி), 506 பத்தி இரண்டு பிரிவுகளின் கீழும் மற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்பிரிவுகள் 147, 341, 323, 294(பி), 506 பத்தி இரண்டு பிரிவுகளின் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :

1. சம்பவம் நடந்து எத்தனை தினங்கள் கழித்து நான் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் 01.03.2010 சம்பவம், வாக்குமூலம் 12.03.2010 அன்று பெறப்பட்டது. மேற்படி காலதாமதத்திற்கு எதுவும் காரணம் உண்டா என்றால் இல்லை. நான் மருத்துவரை 31.03.2010 அன்று விசாரித்தேன். காயச்சான்றில் எலும்பு முறிவு எதுவும் இருந்ததா என்றால் கட்டை விரலில் காயம் கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எலும்பு முறிவு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2. புகார் வாக்குமூலத்தில் கெட்டவார்த்தைகள் பேசி என்ற வார்த்தை இடைசொருகலாக உள்ளது என்றால் சரிதான். சம்பவயிட சாட்சிகள் யாரையும் வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் சாட்சிகள் அனைவரும் காயம்பட்ட நபரின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

3. நான் சம்பவயிடம் செல்லாமலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் மருத்துவரை சரியாக விசாரிக்காமல் மருத்துவ ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் உண்மைக்கு மாறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா1ற்கு ஏற்பட்ட காயத்திற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. உண்மைக்கு மாறாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து தியாகராஜன் (Assistant programmer) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.